# வானவில்

VAANAVIL
ISSUE – 4 APRIL 2011

இதழ் - 4 சித்திரை 2011


# மலையகத் தொழிலாளரின் சம்பள பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்



இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இன்னமும் திகழ்ந்து வரும், மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளரின் சம்பளவுயர்வுக் கோரிக்கை, மீண்டுமொருமுறை மலையக மலைச் சிகரங்களில் முட்டி மோதி ஒலிக்கின்றது. சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையைத் (இந்தியாவையையும் கூட) தனது காலனித்துவப் பிடிக்குள் வைத்திருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால், தென்னிந்தியாவிலிருந்து இலங்கையின் மத்திய மலை நாட்டுப் பிரதேசங்களிலிருந்த தமது தேயிலை, ரப்பர், கொக்கோ தோட்டங்களில் வேலை செய்வதற்காக, ஏமாற்றி அழைத்து வரப்பட்டவர்களே இந்தப் பெருந்தோட்டத் தொழிலாளராவர்.

அன்றைய காலகட்டத்தில், இலங்கைப் பொருளாதாரத்தின் 75 வீதமான விழுக்காடு வருவாயை இந்தத் தொழிலாளரே ஈட்டிக் கொடுத்தனர். இருந்த போதும் இந்தத் தொழிலாளரே இலங்கையின் – ஏன் உலகின் என்று கூடச் சொல்லலாம் – மிக மோசமான கீழ்த்தரமான வாழ்க்கையை அனுபவித்தவர்களாகவும் இருந்தனர். அத்துடன் சுதந்திர இலங்கையின் முதலாவது அரசை அமைத்த டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு, இவர்களது பிரஜாவுரிமை, வாக்குரிமை என்பனவற்றையும் பறித்து நாடற்றவர்களாக்கியது.

இந்த 250 வருட காலத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர், தமது வாழ்க்கையை மேம்படுத்தவும், உரிமைகளை நிலைநாட்டவும், பல்லாயிரக்கணக்கான வேலைநிறுத்தங்களையும், வேறு பல்வேறு வகையான போராட்டங்களையும் நடாத்தி வந்துள்ளனர். இந்தப் போராட்டங்களின் போது பல தொழிலாளர்களின் உயிர்கள் முதலாளிகளாலும், பொலிசாலும், காடையர் கூட்டங்களாலும் காவு கொள்ளப்பட்டும் உள்ளன. அவர்களது கடந்த கால வரலாறு என்பது கண்ணீராலும் செந்நீராலும் எழுதப்பட்ட ஒன்றாகவே இருக்கின்றது.

அவர்களது தொடர் போராட்டங்களால் பிரஜாவுரிமை, வாக்குரிமைப் பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வு ஏற்பட்டதுடன், அவர்களது வாழ்வில் சில மாற்றங்களும் ஏற்பட்டாலும் கூட, இன்றும் கூட அவர்களது அடிப்படை வாழ்வில் மாற்றம் எதுவும் ஏற்பட்டதாகச் சொல்லிவிட முடியாது.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

## சித்திரைப் புத்தாண்டு வாழ்த்து

மலர்ந்துள்ள தமிழ் – சிங்களப் புத்தாண்டையொட்டி, 'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் மனமுவந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
**ஆசிரியர் குழு**

# உள்நோக்கம் பொதிந்த நிபுணர் குழுவின் அறிக்கை

**வானவில்**

இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது நடைபெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய்வதற்காக, ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட மூன்று நிபுணர்கள் குழு, தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. அறிக்கையின் முக்கிய பகுதிகள் ஊடகங்களில் வெளிவந்தும் விட்டன.

இந்த அறிக்கையின் சாராம்சத்தை உற்று நோக்குகையில், அது இலங்கை அரசாங்கத்தின் மீது திட்டமிட்டு குற்றம் சாட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. 30 வருடங்கள் நடந்த இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான போரினூடாக, புலிகள் இயக்கம் எவ்வாறு உலகின் மிக மோசமான ஒரு பாசிசக் கட்டமைப்பை படிப்படியாக உருவாக்கி, இலங்கையிலும் உலகின் சில பாகங்களிலும் பேரழிவைச் செய்தது என்பது குறித்தோ, அது தமிழ் மக்களை எவ்வாறு ஒரு அடிமைச் சமூகமாக மாற்றியது என்பது குறித்தோ, அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படாது திட்டமிட்டு தவிர்க்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

குறிப்பாக, போரின் இறுதி நாட்களில் பல்லாயிரக்கணக்கான மக்களை புலிகள் தமது பாதுகாப்புக்காக ஒரு சிறு நிலப்பரப்புக்குள் விரட்டிச் சென்று எவ்வாறு அழிவுக்குள்ளாக்கினார்கள் என்பதையோ, வழமை போல புலிகள் வைத்தியசாலைகளையும், வழிபாட்டுத் தலங்களையும், சிறுவர் – முதியோர் பராமரிப்பு நிலையங்களையும் எவ்வாறு தமது புகலிடங்களாக மாற்றினார்கள் என்பது பற்றியோ, நிபுணர் குழுவின் அறிக்கை வாயைத் திறக்கவே இல்லை.

இந்தப் போரில் ஈடுபட்ட இரு தரப்பினரும் யுத்த நெறிமுறைகளையும், மனித உரிமைகளையும் மீறி நடந்துள்ளார்கள் என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை. ஆனால் அவர்களது உரிமை மீறல்களை தலைகீழ் விகிதத்திலும், பக்கச்சார்பாகவும் ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழு அறிக்கையிட்டதின் மூலம், அக்குழு சந்தேகத்துக்குரிய ஒன்றாகத் தன்னை இனம் காட்டிக் கொண்டுள்ளது.

ஏனெனில், இந்த யுத்தத்தில் ஈடுபட்ட இருபகுதியினரையும் எடுத்துக்கொண்டு பார்த்தால், ஒரு பக்கத்தில் ஜனநாயகப் பாரம்பரியத்தில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமும், மறுபக்கத்தில் சட்ட விரோதமானதும், உலகின் மிகவும் கொடியதுமான பயங்கரவாத இயக்கமும் போரிட்டிருக்கிறன. அதனால்தான் இந்தப் போரில் பெரும்பான்மையான இலங்கை மக்கள் மட்டுமின்றி, உலகின் பெரும்பாலான நாடுகளும் இலங்கை அரசின் பக்கம் இருந்தன. அதுமட்டுமல்லாமல், இன்று இலங்கை அரசின் மீது உள்நோக்கத்துடன் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருக்கும் மேற்கு நாடுகள் கூட, புலிகளை பயங்கரவாத அமைப்பாக தமது நாடுகளில் தடை செய்திருந்தன என்பதும் கவனத்திற்குரியது.

எனவே இந்த நிபுணர் குழுவின் அறிக்கை, சட்டபூர்வ அந்தஸ்துப்பெற தகுதியானதல்ல என்ற இலங்கை மக்களின் ஏகோபித்த கருத்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

---

**தொடர்பு முகவரி:**

**'வானவில்' இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

sunvaanavil@gmail.com

---

ஏழைகளும் செல்வந்தர்களும் இருவேறாகப் பிரிந்து கிடக்கின்றனர். இவர்களுக்குள் ஓயாமல் போர் நடந்துகொண்டிருக்கிறது. ஒன்று சுரண்டலுக்கான போர். வசதிகளையும் அதிகாரத்தையும் தக்கவைத்துக்கொள்வதற்கான போர். மற்றொன்று, உரிமைக்கான போர். உயிர் மீட்புக்கான போர். சமத்துவத்துக்கான, சுரண்டலற்ற சமூகத்துக்கான போர்.

– எங்கெல்ஸ்

---




# இலங்கைத் தமிழர்களின் தமிழ் உச்சரிப்புக்கு இணையாக எம்மால் தமிழ் சொற்களை உச்சரிக்க முடியவில்லையே!

**தொ**லைக்காட்சி, பண்பலை வானொலி வசதிகள் இல்லாத காலத்தில், இலங்கை வானொலிதான் திருநெல்வேலி மக்களின் அன்றாட வாழ்க்கையில் இரண்டறக் கலந்து இருந்தது. தமிழ் திரைக் கலைஞர்களின், திரைப்படங்களின் பெயர்களை இலங்கை வானொலி அறிவிப்பாளர்களின் உச்சரிப்பில் கேட்கும்போது, தமிழ் எவ்வளவு அழகான மொழி என்பது நமக்குப் புரியும்.

மயில்வாகனன் சர்வானந்தா, ராஜேஸ்வரி சண்முகம், கே.எஸ்.ராஜா, பி.ஹெச் அப்துல் ஹமீத் என அத்தனை அறிவிப்பாளர்களுக்கும் ஒவ்வோர் வீட்டிலும் ரசிகப் பட்டாளம் உண்டு. முகம் தெரியா அந்த அறிவிப்பாளர்களுக்கு ஆளாளுக்கு அவரவர் ரசனைக்கு ஏற்ப கற்பனையாக உருவம் கொடுத்து வைத்து இருப்பார்கள்.

பொங்கும் பூம்புனல், நீங்கள் கேட்டவை, மலர்ந்தும் மலராதவை, புதுவெள்ளம், பாட்டுக்குப்பாட்டு என மனதுக்குப் பிடித்த பல நிகழ்ச்சிகள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பானாலும், என் உள்ளம் கவர்ந்த நிகழ்ச்சி, நட்சத்திர அறிவிப்பாளர் கே.எஸ்.ராஜா வழங்கும் திரை விருந்துதான். ‘வீட்டுக்கு வீடு வானொலிப் பெட்டிக் கருவி முன் ஆவலுடன் குழுமி இருக்கும் ரசிகப் பெருமக்களுக்கு எனதன்பு வணக்கம்’ என்று கே.எஸ்.ராஜா வணக்கம் சொல்லும் போது, தோசை கரைத்துக் கொண்டு இருக்கும் மீனாட்சி அக்காள் மாவுக் கைகளுடன் பதில் வணக்கம் சொல்லுவார். ‘அவாள் நம்கிட்டேயே நேர்ல சொல்லுதமாதிரி இருக்குல்லவா?’ என்பார்.

பல புகழ் பெற்ற தமிழ் சினிமாப் பாடல்களை எனக்கு அறிமுகம் செய்தது இலங்கை வானொலிதான்.

வாணி ஜெயராமை மிகச் சரியாகத் தமிழ் மக்களிடம் கொண்டு சேர்த்த ‘தீர்க்க சுமங்கலி’ படத்தின் ‘மல்லிகை என் மன்னன் மயங்கும்’ என்ற பாடலை நான் முதன்முதலில் இலங்கை வானொலியில்தான் கேட்டேன். அந்தப் பாடல் தான்சேன் விருது பெற்ற பாடல் என்ற தகவலைச் சொல்லி, அதன் பிறகுதான் ஒலிபரப்புவார்கள். இளையராஜாவின் முதல் டூயட் பாடலான ‘லட்சுமி’ பாடத்தின் தென்னை மரத்தில தென்றலடிக்குது’ பாடலை இலங்கை வானொலி சொல்லிச் சொல்லி ஒலிபரப்பியது.

இலங்கை வானொலியின் இன்னொரு முக்கிய நிகழ்ச்சியைத் தவறாமல் திருநெல்வேலி மக்கள் கேட்டு வந்தார்கள். பொப்பிசைப் பாடல்கள் என்னும் நிகழ்ச்சிதான் அது. அந்த நிகழ்ச்சியில் இலங்கையிலுள்ள பாடகர்கள் பாடும் துள்ளலிசைப் பாடல்கள் ஒலிபரப்பாகும். ‘சின்ன மாமியே உன் சின்ன மகளெங்கே, பள்ளிக்குச் சென்றாளோ படிக்கச் சென்றாளோ’ என்னும் பெரும் புகழ்பெற்ற பாடலை நித்தி கனகரத்தினம் பாடியிருப்பார். ‘அட, வாடா மருமகா என் அழகு மன்மதா, பள்ளிக்குத்தான் சென்றாள்…படிக்கத்தான் சென்றாள்’ என இந்தப் பாடலில் பெண் பாட வேண்டிய வரிகளும் ஆண் குரலிலேயே பாடப்பட்டு இருக்கும். தமிழ்த் திரை இசைப்பாடல்களுக்கு ஈடாக இந்தப் பாடலும் அவ்வளவு புகழ் பெற்று இருந்தது.

அம்மன் சந்நிதியிலும், கீழப் புதுத் தெருவிலும் ‘நேயர் விருப்பம்’ நிகழ்ச்சியில் விருப்பப் பாடலை எழுதிப் போட்டுவிட்டுக் காத்திருக்கும் எத்தனையோ பேரை நான் சிறு வயதில் சந்தித்து இருக்கிறேன்.

அப்படி அடிக்கடி இலங்கை வானொலிக்கு நேயர் விருப்பக் கடிதம் எழுதும் ஒரு பெண்மணியைப்பற்றி 'வீட்டுக்கார சொர்ணத்தாச்சி' என்ற சிறுகதையில் வண்ண நிலவன் எழுதியிருக்கிறார்.

இன்றைக்கு இருக்கின்ற எண்ணிலடங்கா பண்பலை வானொலிகள் 24 மணி நேரமும் இயங்குகின்றன. அறிவிப்பாளர்கள் வளவளவென என தமிங்கிலீசில் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். திடீர் என்று நினைவு வந்து, போனால் போகிறது என்று ஒரு பாடலை ஒலிபரப்புகிறார்கள். தாம் தவறாகத் தமிழ் பேசுகிறோம் என்ற குற்ற உணர்ச்சியே இல்லாமல் இவர்கள் பேசிக்கொண்டே போவதுதான் தாங்க முடியாத விடயம்.

இவர்கள் சொல்லும் நல்ல தமிழ் உச்சரிப்புக்காக இலங்கை வானொலிக்குத்தான் நான் நன்றி சொல்ல வேண்டும். இன்னும்கூட இலங்கைத் தமிழர்களின் தமிழ் உச்சரிப்புக்கு இணையாக நம்மால் தமிழ்ச் சொற்களை உச்சரிக்க முடியவில்லையே என்ற வருத்தம் எனக்கு இருக்கிறது. உதாரணத்துக்கு இலங்கை வானொலியில் மட்டுமே 'கிராமத்து அத்தியாயம்' என்ற படத்தின் பெயரை ஒழுங்கான உச்சரிப்பில் நான் கேட்டு இருக்கிறேன். என்னால் 'கிராமத்து அத்யாயம்' என்றுதான் இன்றைக்குச் சொல்ல முடிகிறது.

– '**ஆனந்த விகடன்**' வார இதழில் சுகா என்பவர் எழுதிவரும்''மூங்கில் மூச்சு' என்ற தொடரின் சில முக்கியமான பகுதிகள் மேலே தரப்பட்டுள்ளன.
*

---

# எனது மனத்திரையில்.....

**ஈழத்துப் பூராடனார்**

"………மனிதத் தோற்றத்தில் சொல் என்று ஒன்று இருக்கவில்லை. நாளடைவில் அவன் புரிந்த செய்கைகளின் பொழுது ஒலித்த அல்லது தன் எண்ணத்தை பிறர்க்கு வெளியிட ஒலித்த ஒலியும் அதன் திரளுமே சொற்களாயின. இவ்வாறு பிறரின் உதவியோ, பிற மொழியின் உதவியோ இன்றித் தோன்றிய சொற்களின் வளர்ச்சியே மொழியானது. மனிதன் இயற்கையை ஆண்டு, அவற்றைச் செயற்கைச் செயலாகவும், பொருட்களாகவும் புனையும் போது உண்டான புதுச் சொற்களே கலைச் சொற்களாயின. இதன்படி கலைச்சொற்களின் படைப்பாளிகள் மக்களே என்பது உறுதியாகிறது.

ஆனால், வெளிப்படுத்தப்படாது மறைந்த நிலையில் உள்ள இத்தகைய சொற்களுக்கு, இன்று புதுச் சொற்களைப் படைக்கிறோம். அதுவும் ஆங்கில மொழிச் சொற்களுக்கு சமபதம் தேடுகிறோம். இத்தகைய தருணத்தில் சொல் ஆக்குவதும் பாவிப்பதும், அதைப் பேணிக் காத்து வளர்ப்பதும், மக்களே எனும் உண்மையை மறப்பது நலமன்று.

இன்று, பல தொழில் புரிவோர், அத்தொழில் பற்றிய நுட்பங்கள் வினைகளை உள்வாங்கி சொற்களை உருவாக்குகின்றனர் என்பதில், கலைச் சொற் தேடுவோர் நாட்டம் வைக்க வேண்டும். பல வட்டார வழக்குகளை கற்றவர் இழிசன வழக்கென எள்ளுவதும், கொச்சை மொழி என்பதும் இன்றைய தமிழ் மரபு. ஆனால் அத்தகைய சொற்களிற் பலவற்றில் கலைச் சொற் தூய்மையைக் கண்டுள்ளேன்.

உதாரணமாக, விறகு வெட்டிப் பிழைக்கும் ஒருவன், "இது பாலை மரம், நெக்காது, வெட்டுவது சிரமம்" என்று கேட்ட போது, 'நெக்காது' என்பது கொச்சை மொழியென்றே எண்ணினேன். பின் ஒருபோது, பாடசாலையில் "பாரைக்கு நெக்குவிடாப் பாறை, பசுமரத்தின் வேருக்கு நெக்கு விடும்" என்ற பா வரிகளை விளக்கும் போதுதான், 'நெக்கு' என்பது கடினமான ஒன்றை இலகுவாகப் பிளத்தல் என்ற பொருளைச் சுட்டுஞ்சொல் என்பது புரிந்தது.

இதுபோல நிலத்தடி நீர்க்குழாய்களை "கரந்துறை வாய்க்கால்" என இரு சொல் ஒட்டாகக் கற்றோர் உரைப்பர். ஆனால் வயற்களத்தில் 'நட்டுமை' என்னும் தனிச் சொல்லாக வழங்குவர். இப்படி இழிசனர் வழக்கெனத் தள்ளும் சொற்களின் சொற் தூய்மை தமிழியல் மரபு. வினை நுட்பத் தெளிவு, சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் அனுபவ ஆக்கம், ஆதிய கலைச்சொல் நுட்பத்தைக் கண்டடைந்து பயன் பெறலாம்.

- அண்மையில் கனடாவில் காலமான 'ஈழத்துப் பூராடனார்' 'மனத்திரையில்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையின் (வெளியீடு – விளம்பரம்) ஒரு பகுதி

---

# றொறன்ரோ மாநகர முதல்வருக்கு எதிர்ப்பு வலுக்கிறது!

**க**னடாவின் மிக முக்கிய நகரான றொறன்ரோ மாநகரசபையின் முதல்வராக, சுமார் 4 மாதங்களுக்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட வலதுசாரிப் போக்குள்ள முதல்வரான றொப் போர்ட் (Rob Ford) எடுத்து வரும் நடவடிக்கைகளால், இந்த மாபெரும் நகரின் மக்கள் விசனமும் கோபமும் அடைந்துள்ளனர். குறிப்பாக இதுவரை காலமும் பொதுத்துறை நிறுவனங்களாக இருந்து வந்த போக்குவரத்து துறை, பொது வீட்டு வசதி, குப்பை கூளங்களை அகற்றுதல் என்பனவற்றை அவர் தனியார்துறையினரிடம் கையளிக்க முற்படுவதற்கு எதிராகவும், சமூக நலத் திட்டங்கள் மற்றும் பொதுச் சேவைகள் என்பனவற்றில் குறைப்பு செய்வதற்கு எதிராகவும், பொது பொழுதுபோக்கு நிறுவனங்களின் கட்டணங்களை அதிகரிப்பதற்கு எதிராகவும் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அண்மையில் இந்த எதிர்ப்பு ஒரு மாபெரும் ஆர்ப்பாட்டமாக வடிவம் எடுத்தது.

முதல்வர் போர்ட்டின் நடவடிக்கைகளை எதிர்த்து, ஏப்ரல் 10ந் திகதி சுமார் 15,000 பேர் கலந்து கொண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று மாநகரசபை காரியாலயம் அமைந்துள்ள நகர மண்டபம் (City Hall) வரை நடைபெற்றது. அதன் பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் Ryerson University மாணவர் பிரதிநிதி, ஒன்ராறியோ மாகாண தொழிற்சங்க சம்மேளனத் தலைவர், றொறன்ரோ மற்றும் யோர்க் பிராந்திய தொழிலாளர் சபைத் தலைவர் உட்படப் பலர் முதல்வர் போர்ட்டின் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டித்து உரையாற்றினர். தொடர்ந்தும் பிரமாண்டமான எதிர்ப்பு ஊர்வலங்களை நடாத்தப் போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.
*

---

# மருத்து நீரின் மகிமை

**த**மிழ் - சிங்களச் சித்திரைப் புது வருடப் பிறப்பின் போது, தமிழர்கள் தாம் பரம்பரையாக வழிபடும் ஆலயங்களிலிருந்து 'மருத்து நீர்' எடுத்து வந்து தலையில் தேய்த்துக் குளிப்பது, தொன்று தொட்டு இருந்து வரும் ஒரு வழக்கமாகும். இந்தச் செயல் எதற்காக உருவானது என்று தெரியாமல், பலரும் ஒரு சம்பிரதாயச் சடங்காக இதைச் செய்து வருகின்றனர். ஆனால் இதற்கு விஞ்ஞானபூர்வமான ஒரு காரணி உண்டு என்பது பலருக்குத் தெரிவதில்லை.

எமது இலங்கை, இந்தியா போன்ற தென்னாசிய நாடுகளில் தை மாதத்தில் பருவ மழை முடிந்து , 'மாசியில் மூசிப் பெய்யும் பனியும்' முடிந்து, பங்குனியில் இளவேனிற் காலம் ஆரம்பமாகி, சித்திரையில் வெப்பம் அதிகரிக்கத் தொடங்குகின்றது. இந்தப் பருவ மாற்றத்திற்கு ஏற்ப நமது உடலைத் தயார் செய்வதற்காகவே, நோய் எதிர்ப்புத் தன்மையுடனான இந்த 'மருத்து நீரை' அந்தக் காலகட்டத்தில் தயார் செய்து, தலையில் தேய்த்து குளிக்கும் வழக்கம் ஏற்பட்டதாக, சில ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதனால்தான், இந்த 'மருத்து நீரை'த் தயாரிப்பதற்கு மருத்துவக் குணாம்சமுள்ள தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஸ்ணுகிரந்தி, சீதேவியார், செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திப்பிலி, சுக்கு போன்றவற்றைச் சேகரித்து தூய்மையான நீரில் காய்ச்சித் தயாரிக்கின்றனர்.

'மருத்து நீரின்' மகிமை இப்பொழுது புரிகிறதல்லவா?
*

---

சமூகம் என்பது செல்வந்தர்களின், பிரபுக்களின் சமூகமாகவே மாறிக்கிடக்கிறது. சமூகத்தின் நோக்கம் ஒன்றாகவும், அந்தச் சமூகத்தின் நுகத்தடியில் சிக்கிக்கிடக்கும் பாட்டாளி வர்க்கத்தின் நோக்கம் வேறானதாகவும் இருக்கிறது. இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரானது. கம்யூனிச சமூகத்தில் இந்த நிலை நீடிக்காது. தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் இடையிலான பகைமையும் வேறுபாடும் அழியும். இதன் மூலம் இரு வர்க்கத்துக்கு இடையில் நடக்கும் சமூகப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்படும். சமூக அமைதி சாத்தியமாகும்.

- எங்கெல்ஸ்

---

# பெண் விடுதலை குறித்து லெனின் அமைச்சரவையின் முதல் பெண் அமைச்சர் அலெக்சாண்டிரா கொலென்ரெய் 83 ஆண்டுகளுக்கு முன் கூறிய கருத்துக்கள்!



Alexandra Kollontai

**அலெக்சாண்டிரா கொலென்ரெய்** (Alexandera Kollontai - 1872 – 1952) **புரட்சிக்கு முந்தைய ரஸ்யாவில் ஒரு இராணுவ ஜெனரலின் மகளாகப் பிறந்தார். அவர் தனது இளமைக்காலத்தில், சூரிச் பல்கலைக்கழகத்தில் அரசியல் பொருளாதாரத்தில் பட்டம் பெற்று நாடு திரும்பிய பின், ரஸ்ய சமூக ஜனநாயகக் கட்சியில் இணைந்தார். பின்னர் லெனின் தலைமையிலான போல்ஸ்விக் கட்சியில் இணைந்து, மகத்தான சோவியத் புரட்சியில் பங்கேற்றார். 1917ல் புரட்சி வெற்றி பெற்ற பின்னர், லெனின் தலைமையில் அமைக்கப்பட்ட முதலாவது சோவியத் அமைச்சரவையில், சமூக நலத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவரே உலகில் முக்கியமான ஒரு நாட்டில் நியமிக்கப்பட்ட முதல் பெண் அமைச்சராவார்.**

**அவர் அமைச்சராக இருந்த காலத்தில், சோவியத் பெண்கள் அதுவரை அனுபவித்திராதது மட்டுமின்றி, கண்டு கேட்டுமிராத எட்டுமணி நேர வேலை, சம சம்பளம், பிரசவ விடுமுறை, சுகாதார வசதி போன்ற பல உரிமைகளை ஏற்படுத்தினார்.**

**அவர் அமைச்சராக மட்டுமின்றி ராஜதந்திரத்துறையிலும் பிரகாசித்து, நோர்வே, மெக்சிக்கோ, சுவீடன் ஆகிய நாடுகளில் சோவியத் தூதராகவும் பணியாற்றி, உலகின் முதலாவது பெண் தூதுவர் என்ற புகழையும் பெற்றார்.**

**சுமார் 15 வரையிலான பெறுமதிமிக்க நூல்களை எழுதியுள்ள அவர், தனது பிரசித்தி பெற்ற 'சிவப்பு காதல்' என்ற நாவலின் ஆங்கில மொழிப் பதிப்புக்கு, மெக்சிக்கோ சிற்றியிலிருந்து 1927 மார்ச்10ம் திகதி எழுதிய முன்னுரை அதன் முக்கியத்துவம் கருதி இங்கே தரப்படுகிறது. சர்வதேச ரீதியாகவும், தமிழ் சூழலிலும் 'பெண்ணியம்' பற்றி பல்வேறு கோணங்களில் வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்து வரும் இன்றைய சூழலில், அலெக்சாண்டிரா கொலேன்ரெய் சுமார் 83 ஆண்டுகளுக்கு முன்னர் அன்றைய பெண்களின் நிலை பற்றியும், பெண்கள் உரிமை சம்பந்தமாக முற்போக்காளர்கள் எடுக்க வேண்டிய நிலைப்பாடு குறித்தும் எழுதிய இவ்வாசகங்கள், இன்றும் உயிர்த்துடிப்புடன் இருப்பதை, இந்த முன்னுரையை வாசிப்பவர்கள் உணர்ந்து கொள்ள முடியும்.**

**ஆசிரியர் குழு**

அந்த முன்னுரை வருமாறு:

இந்நாவல் அடிப்படையில் அறிவியல் குறித்த ஒரு ஆய்வோ அல்லது சோவியத் ரஸ்யாவில் உள்ள வாழ்வின் தரம் குறித்த ஒரு உரைச் சித்திரமோ அல்ல. இது போருக்கு பிந்தைய காலகட்டத்தில், உலக சமூகத்தில் நிலவிய பாலியல் குறித்த ஒரு மனவியல் ரீதியான ஆய்வு மட்டுமே.

இந்த ஆய்வுக்கு, எனது நாட்டைச் சூழலாகவும், எனது மக்களை கதாபாத்திரமாகவும் எடுத்துக் கொண்டுள்ளேன். ஏனெனில் எனக்கு அவர்களைப் பற்றித்தான் நன்றாகத் தெரியும். அவர்களது ஆத்மார்த்த வாழ்வு மற்றும் உணர்வுகளைக் குறித்து என்னால் உயிரோட்டத்துடன் பேச முடியும்.

இந்நாவலில் வந்துள்ள பெரும்பான்மையான பிரச்சினைகளை, வெறுமனே சோவியத் ரஸ்யாவிற்கு மட்டுமே உரியனவாகப் பார்க்க முடியாது. இது உலகளாவிய பிரச்சினை. இந்த மாதிரியான பிரச்சினைகளை ஒருவர் எந்த நாட்டில் வேண்டுமானாலும், எதிர் கொள்ளலாம். இந்த அமைதியான, மனவியல் ரீதியான உணர்வுப்பெருக்கு, தற்போதைய மாறிய பாலியல் உறவுகள் காரணமாக எழுந்துள்ளது. இதன் பரிமாணத்தை, குறிப்பாக பெண்களின் உணர்வு நிலை குறித்த மாறிய பரிமாணத்தை, தற்போதைய ஐரோப்பாவின் இளைய தலைமுறையினரிடம் தெளிவாகக் காண முடிகிறது.

நாம் யாராவது ஒரு ஆணை, அவனது காதல் விவகாரத்தை வைத்து, எடை போடுகிறோமா? பொதுவாய் அவன் தனது பாலியல் உறவில், குறிப்பிட்ட நெகிழ்வான எல்லையைத் தாண்டாத வரைக்கும், அவனது பாலியல் வாழ்க்கையை அவனது 'தனிப்பட்ட விவகாரம்' எனச் சொல்லி, நாம் கண்டும் காணாமலும் விட்டு விடுகிறோம். ஆணின் குணாம்சங்கள், தனது குடும்ப அறவியலை அவன் எப்படி போற்றிப் பாதுகாக்கிறான் என்பதை வைத்து எடை போடப்படுவதில்லை. மாறாய் பணிபுரிவதில், அவனுக்கு உள்ள திறமை, அவனது அறிவு, அவனது திடம், சமூகத்திற்கும் அரசுக்கும் அவனது பயன்பாடு போன்றவற்றை வைத்து நிர்ணயிக்கப்படுகிறது. பெண்களைப் பொறுத்தவரை, சமூகத்திற்கும் அரசுக்கும் பெண்கள் செய்ய வேண்டிய நேரடியான கடமை என்று எதுவும் இல்லை. அவர்களது ஒட்டுமொத்த செயல்பாடும், குடும்ப எல்லைக்குள்ளேயே முடக்கி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே நாகரீகம் அடைந்த நாடுகளில் கூட, குடும்ப மற்றும் பாலியல் உறவுகளில் பெண் தான் ஆற்ற வேண்டிய சிறந்த அறவியலை வெளிப்படுத்தினால் போதும் என எதிர்பார்க்கிறது.

இன்று பெரும்பான்மையான நாடுகளில் உள்ள பெண்களில், பாதிக்கும் மேற்பட்டவர்கள் ஆண்களைப் போலவே உழைக்கிறார்கள், போராடுகிறார்கள். சமூகமும் அப்படிப்பட்ட பெண்களிடமிருந்து பல தேவைகளைக் கோரி நிற்கின்றது. பொதுவாகவே தற்போதைய சமூகத்தில், ஒரு நாட்டின் குடிமக்கள், குடும்ப அறவியலில் கறை படியாமல் சிறந்தவராய் விளங்குதல் என்பதைக் காட்டிலும், தங்கள் சமூகக் கடமைக்கு ஈடுகொடுத்து நின்று விளங்குதல் என்பதுதான் முக்கியம் எனக் கருதப்பட்டு, அதற்குத்தான் அதிக மரியாதையும், முக்கியத்துவமும் தரப்படுகிறது. இன்றைய பெண்ணுக்கு குடும்ப வாழ்க்கை மட்டுமே செயல்பாட்டுக்கான தளம் என்று சொன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இருந்தாலும், அவளது சமூகக் கடமையின் காரணமாகவும், வீட்டை விட்டு வெளியே வந்து அவள் செய்யும் பணியின் காரணமாயும், அவள் தனது குடும்பப் பொறுப்புகளை ஒருங்கே நிறைவேற்றுவதில், பெரும் துயரை எதிர்கொள்கிறாள் என்பதுதான் உண்மை. ஆகவே ஒரு பெண்ணை எப்படி எடைபோடுவது என்பதில், நாம் தாத்தாக்கள் பாட்டிகள் காலத்தில் உள்ளது போல் இல்லாமல், தற்போது வேறுபாட்டுடன் இருக்கிறோம்.

ஒரு பெண் தற்போதைய முதலாளித்துவ அமைப்பு நிர்ணயித்துள்ள குடும்ப அறவியலைச் சரியாக நிறைவேற்றி, சிறந்தவள் என மதிக்கப்படுகிறாள் என வைத்துக் கொள்வோம். அதற்காக அவளுக்குச் சமூகத்தில் இருந்து உண்மையான பாராட்டுதலோ, அல்லது அரசிடம் இருந்து தகுந்த மரியாதையோ கிடைப்பது கிடையாது. உண்மையில் அனைவரும் அவளை அப்படியே கண்டு கொள்ளாமல் விட்டு விடுகிறார்கள். ஆனால் அதற்கு மாறாய், வேறொரு பெண் அரசியலிலோ, கலை மற்றும் அறிவியல் போன்ற எது ஒன்றிலோ வித்தகராய் இருந்தால், தற்போதைய முதலாளித்துவ பாலியல் அறவியல்படி, அவளை 'கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாதவளாய்' இருந்தாலும், அவளை அவ்வளவு எளிதில் உதறி விட முடியாது. சொல்லப் போனால், யாருக்கும் அந்த மாதிரி பெண்ணின் முதுகுப்புறத்தில் இருந்து முணுமுணுக்கக் கூட தைரியம் இருக்காது.

இந்த இரண்டுவகையான பெண்களையும் எப்படி நாம் சமன்படுத்துவது? முதல் பெண் நாட்டுக்கோ அல்லது சமுதாயத்திற்கோ எந்த உருப்படியான பங்களிப்பைச் செய்யாவிட்டாலும், குடும்ப அறவியலை பேணிக்காப்பவள். அடுத்தவளது நடத்தை கண்டனத்திற்கு உள்ளானது என்றாலும், அவள் மிகச்சிறந்த சமூக ஊழியை. நிச்சயமாக இரண்டாவது பெண்ணே சமூக மரியாதையைப பெறுகிறாள்.

பாலியல் அறவியல் சம்பந்தமான நமது கருத்து மாறிக்கொண்டே இருக்கிறது. அக்கருத்து எப்போதும் தேங்கிப்போய், அப்படியே கிடப்பது கிடையாது. மனித வரலாற்றில் அறவியல் சம்பந்தமான பரிணாமம் துரிதமாக முன்னேறிச் சென்ற காலம்தான் அதிகம். எப்போதாவது அபூர்வமாகத்தான், எல்லாத் துறைகளிலும் உள்ளது போல, அறவியல் சம்பந்தமான விடயங்கள் தேங்கிக் கிடந்திருக்கிறது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்தான், துமாஸ்-பில்ஸ் என்பவர் ‘மணமுறிவு’ என்பது ஒரு வீழ்த்தப்பட்ட உயிரி என்று எழுதினார். ஆனால் அதற்குள் இன்றைய பிரான்சில், திருமணம் செய்து கொள்ளாது தாயானவளுக்கும் சம உரிமை கொடுக்க வேண்டும் என்று விவாதிக்கப்படுகிறது. பாலியல் அறவியல்கள் குறித்து தீர்மானிப்பதிலும் யோசிப்பதிலும், பழைய முதலாளித்துவ புனைவுகளின் வீச்சு, தற்பொழுது சிறிது சிறிதாகத் தளர்ந்து வருகிறது.

அறவியல் சம்பந்தமான பழைய பிற்போக்குத்தனமான முதலாளித்துவ சிந்தனைகளை எதிர்த்துப் போராட இப்புத்தகம் உதவும். கூடவே பெண் எப்படி தனது குடும்ப அறவியலை நிறைவேற்றினாள் என்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், அவள் தனது வர்க்கத்திற்காகவும், நாட்டிற்காகவும், மனிதாபிமானத்திற்காகவும் ஆற்றும் புத்திசாலித்தனமான பணி மற்றும் திறமை ஆகியவற்றை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொண்டு மதிக்கப்பட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டவும், இந்தப் புத்தகம் உதவும் என நம்புகிறேன்.

*

---

# முழுப் பூசனிக்காயை ஒரு பிடி சோற்றுக்குள் மறைக்கும் சம்பந்தன்!

‘இலங்கையின் போர்க் குற்றங்கள்’ தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழுவின் அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து அது சம்பந்தமாகக் கருத்துச் சொல்லும் ஒவ்வொருவரும் தாம் எங்கே நிற்கிறோம் என்பதையும் அம்பலப்படுத்தி வருகின்றனர். ஒவ்வொருவரும் சரியாகவோ பிழையாகவோ தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதில் தவறேதும் இல்லை. ஆனால் ஒரு முழுப் பூசனிக்காயை ஒரு பிடி சோற்றுக்குள் மறைக்க முயல்வதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

ஏப்ரல் 18ந் திகதி இந்த அறிக்கை குறித்து பி.பி.சி தமிழ் சேவை, தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் ஆர்.சம்பந்தனிடம் அபிப்பிராயம் கேட்டது. சம்பந்தன் அபிப்பிராயம் தெரிவிக்கையில் அந்த அறிக்கையைத் தாம் வரவேற்பதாகவும், அதில் சொல்லப்பட்டுள்ள விடயங்களைத் தாம் போர் நடைபெற்ற காலப் பகுதியில் பாராளுமன்றத்தில் ஏற்கெனவே தெரிவித்ததாகவும் கூறினார். அப்படிக் கருத்துச் சொல்வதற்கு அவருக்கு உள்ள உரிமையை மறுப்பதற்கில்லை.

அடுத்ததாக பி.பி.சி ஒரு கேள்வி தொடுத்தது. அதாவது ‘அரசாங்கத்தின் மீது பல குற்றச்சாட்டுகளை முன்வைத்த நிபுணர் குழு, புலிகள் மீதும் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளதே, அப்படிப் பார்க்கையில் கடந்த காலத்தில் புலிகளின் செயற்பாடுகளை முழுவதுமாக ஆதரித்து வந்த கட்சி என்ற வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது தவறுகள் குறித்து சுய விமர்சனம் செய்து கொள்ளுமா?’ என பி.பி.சி செய்தியாளா சம்பந்தனிடம் கேள்வியொன்றை எழுப்பினார்.

இந்தக் கேள்வியைக் கேட்டு பதறித் துடித்த சம்பந்தன், தமது கட்சிக்கும் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்ற மாதிரியும், அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்றை ஏற்படுத்திச் சமாதானத்தை ஏற்படுத்தவே தாம் முயன்று வந்ததாகவும், ஹிட்லரின் பொய்யுரைஞன் கொயபல்ஸ்சையும் விஞ்சிய பொய்க் குண்டொன்றைப் தூக்கிப் போட்டாரே பார்க்கலாம். (தமிழர்கள் ஞாபக சக்தி இல்லாதவர்கள் என்பதுடன், சோணகிரிகள் என்றும் சம்பந்தன் எண்ணினாரோ என்னவோ?)

ஐயா சம்பந்தனே! நீங்கள் கண்ணை மூடிக்கொண்டு உலகம் இருண்டு விட்டது என்று நினைப்பதற்காக உலகம் இருண்டு விடப் போவதில்லை. நீங்கள் புலிகளின் பகிரங்கமான பினாமியாகச் செயற்பட்டதும், புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநி என்று சொல்லித் திரிந்ததும், புலிகள் செய்து வந்த கொலைகள், அட்டூழியங்கள் எல்லாவற்றையும் மௌனமாக இருந்து ஆசீர்வதித்து வந்ததும், 2002 பொதுத்தேர்தலில் புலிகளின் கள்ள வாக்கு உதவியுடன் 22 பேரை பாராளுமன்றம் அனுப்பியதும், இறுதி யுத்த நேரத்தில் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயமாகக் கொண்டு சென்று அழிவுக்குட்படுத்தியதைக் கண்டிக்காமல், புலிகளைக் காப்பற்ற யுத்த நிறுத்தம் கோரியதும், இன்னும் பல உங்களது புலி ஆதரவு நடவடிக்கைகளும், எமது மண்டையை விட்டு கழராமல் திரும்பத் திரும்ப நினைவுக்கு வருகின்றனவே, என்ன செய்யலாம் ஐயா? ஏதாவது நல்ல ஞாபக மறதி மருந்து இருந்தால் தயவு செய்து அறியத் தருவதுடன், முழுப் பூசனிக்காயை ஒரு பிடி சோற்றுக்குள் எவ்வாறு மறைப்பது என்ற வித்தையையும் கற்றுத் தந்தீர்கள் என்றால் பேருதவியாக இருக்கும் ஐயா!

**- விடாக்கொண்டன்**

# தகவல் திரை

## கியூபா

**அமைவிடம்**

- தெற்கில் கரீபியன் கடலையும், வட கிழக்கில் அத்திலாந்திக் கடலையும் கொண்டு, மெக்சிக்கோ குடாவின் வாய்ப்பகுதியில் அமைந்துள்ளது.

**பரப்பளவு**

- 110,861 சதுர கிலோமீட்டர்களாகும். கரீபியன் பகுதியிலுள்ள மிகப்பெரிய தீவு இதுதான்.

**சனத்தொகை**

- ஐரோப்பிய – ஆபிரிக்க வம்சாவழியினர் கலந்து வாழ்கின்றனர். கொலம்பஸ் வருகையின் பின் ஏற்பட்ட ஸ்பானிஸ் படையெடுப்பாலும், ஐரோப்பிய நோய்த் தாக்கங்களாலும் அங்கு வாழ்ந்த பூர்வீக குடிகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டனர். இப்போதைய சனத்தொகையில் 51 வீதம் கலப்பினத்தவர், 37 வீதம் வெள்ளையர்கள், 11 வீதம் கறுப்பர்கள், 1 வீதம் ஆசிய சமூகத்தினராவர்.

**கல்வியறிவு**

- 100 வீதம் படிப்றிவு உள்ள நாடு கியூபா.

**சராசரி ஆயுள்**

- லத்தீன் அமெரிக்காவிலேயே அதிக வயதான 79 ஆண்டுகள்.

**அரசியலமைப்பு**

- கம்யூனிஸ்ட் கட்சியினால் தலைமை தாங்கப்படும் சோசலிசக் குடியரசு. நாடாளுமன்றமான தேசிய சபை அமைச்சரவையைத் தேர்ந்தெடுக்கும்.

**தலைமை**

- 1959ல் அமெரிக்க சார்பு சர்வாதிகாரி பட்டிஸ்டாவுக்கு எதிரான புரட்சிக்குத் தலைமை தாங்கியதிலிருந்து, 50 ஆண்டுகளுக்கு மேலாக கியூப அரசின் தலைவராக இருந்து வந்த ஃபிடல் கஸ்ட்ரோ, மூப்புக் காரணமாகப் பதவி விலகிய பின்னர், புரட்சியின் முன்னோடிகளில் ஒருவரும், கஸ்டரோவின் சகோதரருமான ராவூல் கஸ்ட்ரோ இப்பொழுது அதிபராகப் பதவி வகிக்கின்றார்.

*

---

## மார்க்சிஸ்டுகளின் முன்னுதாரணம்!

**கேள்வி:** சட்டை இல்லாத காந்தி, காரில்லாத கக்கன், சொத்து சேர்க்காத காமராஜர் போன்ற தலைவர்கள் எதிர்காலத்திலாவது தோன்றுவார்களா?

**பதில்:** எதிர்காலத்தில் என்ன? இந்தக் காலத்திலும் இருக்கத்தான் செய்கிறார்கள். சைக்கிளில் வரும் மதுரை கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ நன்மாறன் (சி.பி.எம்.) போன்றோரை உதாரணம் சொல்லலாம். ஆனால் இவர்களை முன்னுதாரணமாக ஏற்று நடக்க வேண்டியவர்கள், அதிகார பலத்தாலும் பணத்தாசையாலும் அதிகம் ஈர்க்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதுதான் பெருங்குறை.
(இங்கு சி.பி.எம். என்று குறிப்பிடப்படுவது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை ஆகும்.)

- 'கல்கி' வார இதழில் வெளியான ஒரு கேள்வியும் பதிலும்

---

***அனைத்துலகத் தொழிலாளர் ஐக்கியத்தை வலியுறுத்தி***

## *மேதினக் கூட்டம்*

***காலம்:* மே 01, 2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி**
***இடம்:* கனடா – ஸ்காபரோ சிவிக் சென்ரர் கூட்ட மண்டபம்**

***தொழிற்சங்கத் துறை சார்ந்தவர்களும், முற்போக்கு – ஜனநாயக ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் உரையாற்றுவர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.***

***மேதின ஏற்பாட்டுக்குழு***
***கனடியத் தமிழர் ஜனநாயக விழிப்புணர்வு மன்றம்***
E-mail: demovizhippu@hotmail.com

---

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு கடிதம்

# மதகுருமார்களின் விசமத்தனம்!

அண்மையில் தென்னிலங்கையிலிருந்து நல்லிணக்கத்துக்கான சர்வமத ஒன்றியத்தின் தூதுக்குழு ஒன்று, யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு, பல தரப்பினரையும் சந்தித்து அங்குள்ள நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டது. இக்குழுவில் பௌத்த, இந்து, முஸ்லீம், கிறிஸ்தவ குருமார்கள் அங்கம் வகித்துச் சென்றிருந்தனர்.

இக்குழுவினர் வந்து சென்ற பின்னர் அக்குழுவினருடனான சந்திப்பின் போது சில கிறிஸ்தவ மத குருமார்கள் நடந்து கொண்ட முறை குறித்து, இங்குள்ள மக்கள் மத்தியில் விசனம் ஏற்பட்டிருந்தது. இந்த சூழ்நிலையில் இனம் தெரியாத நபர்கள் சிலர், இந்நிகழ்வில் பங்குபற்றிய ஊர்காவற்துறை சென் மேரீஸ் பங்குத்தந்தை சி.ஜி.அருட்குமார் மீது சாணி கரைத்த தண்ணீரை ஊற்றி அவமரியாதை செய்துள்ளனர். இவ்வாறு செய்தது ஒரு அநாகரிகமான, பேச்சுச் சுதந்திரத்தை கொச்சைப்படுத்தும் செயல் என்ற போதும், இந்த மத குருமார்களும் கூட யாழ்ப்பாண நிலைமைகள் பற்றிப் பேசும் போது, மக்களின் மன உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் பேசி வருவது வருத்தத்துக்குரியதாக இருக்கின்றது.

தென்னிலங்கை சர்வமதக் குழுவினர் தமது விஜயத்தின் போது, யாழ்.மாவட்ட சர்வ மத குழுவினருடன் ஒரு சந்திப்பை யாழ்.றிம்மர் மண்டபத்தில் நடாத்தினர். அதில் பங்குபற்றிப் பேசிய நல்லூர் பங்குத் தந்தையான ஐ.டி.டிக்சன் என்பவர், யாழ்ப்பாணத்தில் எவ்விதமான சுதந்திரமும் மக்களுக்கு இல்லையென்றும், அவர்கள் இராணுவ அடக்குமுறையின் கீழ் அச்சத்துடனேயே வாழ்வதாகவும் உண்மைக்குப் புறம்பாக, அரசாங்கத்தின் மீதும் இராணுவத்தினர் மீதும் கடுமையான குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார். அத்துடன், விரைவில் குடாநாட்டு மக்கள் மலசலம் கழிப்பதற்குக்கூட இராணுவத்தினரின் அனுமதி பெற்றே செல்ல வேண்டியிருக்குமெனவும் கூறினார்.

இந்தப் பங்குத் தந்தையின் இவ்வாறான அவதூறுப் பேச்சு, தூதுக்குழுவில் வந்திருந்தவர்களையும், அங்கிருந்த ஏனையோரையும் புண்படுத்தியதை அவதானிக்க முடிந்தது. அவர் முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு ஒப்பான சொல்கணைகளை அங்கு உரையாற்றிய ஊர்காவற்துறை பங்குத் தந்தை ஜெயக்குமாரும், அமலமரித் தியாகிகள் சபையின் பகுதி முதல்வர் போல் நட்சத்திரமும் கூட வீசியிருந்தனர். இது பற்றிஅ ங்கு கருத்துத் தெரிவித்த தென்னிலங்கையிலிருந்து வந்திருந்த பௌத்த மத்குரு ஒருவர், '30 வருடப் போரினால் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளுக்கு ஒரு சில மாதங்களில் தீர்வு கண்டுவிட முடியாது' எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மத குருமார்கள் தென்னிலங்கையிலிருந்து வந்த நல்லெண்ணத்துக்கான மதக் குழுவினரின் மனதைப் புண்படுத்தும் வகையில் பேசியது, ஒரு திட்டமிட்ட செயல் எனவும், இது புலிகளினதும், சில வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகளினதும் இரகசியமான நிகழ்ச்சி நிரலுடன் சம்பந்தப்பட்டது எனவும், பலரும் கருதும் சூழ்நிலை இதனால் ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், இந்த மாதிரியான சில பங்குத் தந்தைகளும், ஆண்டகைகளும் கடந்த காலங்களில், புலிகள் மக்கள் மீது செய்து வந்த அடாவடித்தனங்களையும், அநியாயங்களையும் கண்டும் காணாமல் இருந்து வந்ததுடன், சிலர் அதற்குத் துணை போயும் உள்ளனர் என்பது அனைவரும் அறிந்த விடயம். இவர்களது கடந்தகாலச் செயற்பாடுகளை மக்கள் இன்னமும் மறந்துவிடவில்லை என்பதை, இவர்கள் மனதில் வைத்திருப்பது நல்லது.

கொடூரப் புலிகளை அழித்து மக்களுக்கு நிம்மதியையும், இயல்பு வாழ்க்கையையும் உருவாக்கிய அரசையும், இராணுவத்தையும் குறைகூறும் இவர்கள், மீண்டும் புலிகளின் இருண்ட யுகத்தை கொண்டு வரவா விரும்புகிறார்கள்? குறைந்த பட்சம் இவர்கள், தாங்கள் இப்படிப் பகிரங்கமாக அரசுக்கும் இராணுவத்துக்கும் எதிராக கடும் தொனியில் அவதூறுப் பேச்சுகள் நிகழ்த்துவதற்குக் கூட, சுதந்திரமான ஒரு சூழ்நிலையை இந்த அரசு தான் உருவாக்கித் தந்துள்ளது என்பதையாவது புரிந்து கொண்டால் சரி.

— **அருள்வேந்தன்** - கஸ்தூரியார் வீதி - யாழ்நகர்

# போர் முடிந்துள்ள சூழலில் இலங்கை மீனவர்கள் தமது உரிமையைக் கோருவதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

## ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ பத்திரிகையாளர் கேள்வி!

‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ பத்திரிகையின் 2011 பெப்ருவரி 27ம் திகதி இதழில் வி.சுதர்ஸன் என்பவர் “It’s a fishy sort of tale” என்னும் தலைப்பில் விசேட பத்தியொன்றை எழுதியுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான பகுதிகளை எமது வாசகர்களுக்காக கீழே தருகின்றோம்.

- இந்தியாவுக்கும் இலங்கைக்குமான ஆகக் குறைந்த கடல் எல்லைத் தூரம் 18 கடல் மைல்கள் மட்டுமே.

- தமிழ்நாடு மீனவர்களின் எண்ணிக்கை 7,00,000 ஆகும். இவர்கள் பொலிகற்றிலிருந்து கன்யாகுமரியூடாக வட சென்னை வரையிலான 1076 கிலோமீட்டர்கள் தூரமுள்ள 591 மீனவக் கிராமங்களில் வாழ்கின்றனர்.

- இந்த மீனவர்களிடம் மொத்தமாக 60,000 மீன்பிடிப் படகுகள் இருக்கின்றன. இலங்கையில் உள்நாட்டுப் போர் நடந்த காலத்தில் கூட, இப்படகுகளில் கால் பங்கு தொகையானவை இலங்கைக் கடல் எல்லைக்குள் தினசரி ஊடுருவி வந்துள்ளன. இப்படகுகளில் தாம் எங்கே நிற்கிறோம் என்பதை அடையாளம் காட்டும் Global Position System (GPS) எனப்படும் கருவி வசதிகளும், அந்த வசதிகளுடன் கூடிய செல்லிடத் தொலைபேசி வசதியும் இருந்த போதிலும், தெரிந்து கொண்டே இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் ஊடுருவி வந்துள்ளனர்.

- இந்திய ரோலர் படகுகள் கூடுதலாக பருத்தித்துறை, காங்கேசன்துறை, நெடுந்தீவு, தலைமன்னார் பகுதிகளிலேயே ஊடுருவுகின்றன. சிலவேளைகளில் திரிகோணமலைக்கு தெற்கே வெகுதூரம் வரை கூட அவை ஊடுருவிச் செல்கின்றன.

- ஒவ்வொரு நாளும் இலங்கையின் ராடர் அமைப்பில் இந்திய ரோலர்களின் ஊடுருவல் அவதானிக்கப்படுகிறது. தனது கடல் பகுதியில் இந்திய ரோலர்கள் ஊடுருவி இருப்பதை, இலங்கை தனது செய்மதி மூலம் தொடர்ந்து படம் பிடித்து வருகின்றது. இலங்கை ரடாரில் இந்தப் படகுகள் இருண்ட வானத்தில் நட்சத்திரங்கள் மின்னுவது போலத் தென்படுகின்றன.

- தினசரி கண்ணுக்கு அடையாளம் தெரியக்கூடிய படகுகளின் எண்ணிக்கையை இலங்கை அதிகாரிகள் பதிவு செய்கின்றனர். சில வேளைகளில் படகுகளின் பதிவு இலக்கங்களும் கூட அடையாளம் கண்டு பதிவு செய்யப்படுகின்றன. இவ்வாறு இவ்வாண்டு ஜனவரி 27 – 28ல் 10 படகுகளும், பெப்ருவரி 19ம் திகதி 700 படகுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. 2011 ஜனவரி முதல் இந்தப் பத்தி எழுதப்படும் திகதி வரை (பெப்ருவரி 27), இலங்கைக் கடல் எல்லைக்குள் 6466 இந்திய ரோலர்கள் ஊடுருவியுள்ளன. இதில் 547 படகுகளின் பதிவு இலக்கங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

- இந்திய ரோலர்கள் ஊடுருவுவது சம்பந்தமான பட்டியல் தினசரி கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்புப் பிரிவுக்கு இலங்கை அதிகாரிகளால் கையளிக்கப்படுகின்றது. அதேபோல, சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தால் தமிழ்நாடு அரசு மீனவ இலாகாப் பணிப்பாளருக்கும் இந்தப் பட்டியல் கையளிக்கப்படுகிறது. தமிழ்நாடு மீன்பிடி இலாகா இந்தத் தகவல்களை என்ன செய்கின்றது என்று என்னைக் கேட்காதீர்கள். அவைகள் பெரும்பாலும் குப்பைக் கூடைக்குள் தான் சென்றிருக்கும்!

- கடந்த காலங்களில் பாக்குநீரிணையில் படகுக் கடத்தல்காரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பெற்றோல், டீசல், மினி லொறிகள், டாட்டா சுமோக்கள், Traveras, ஆட்டோக்கள், காஸ் சிலின்டர்கள், டிப்பர் லொறிகள், TVS50 மொபேட், கீரோ கொண்டா மோட்டார் சைக்கிள்கள், Eicher வான்கள், பீடி பண்டல்கள், அரிசி, பணம், பட்டரிகள், ஜீப்கள், கைக்கடிகாரங்கள், தைத்த உடைகள், தமிழ் – ஆங்கில சீடிகள், சவர்க்காரம், பலசரக்கு வகைகள், பால் – பால் மா, கைபேசி, கம்யூட்டர் உதிரிப் பாகங்கள், கமரா, சுடுநீர்ப் போத்தல்கள், டிராக்டர்கள், மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், Dried Sea Cucumber, மீன்பிடி உபகரணங்கள், உள்ளூர் மதுபானம்.

- இதுதவிர, போர் நடந்த காலத்தில் புலிகளுக்காக கடத்தப்பட்ட Detonators, Ball bearings, AK56, GPS System, Aluminium Ingot (to make ammunition), TNT வெடிமருந்து, LTTE சீருடைத்துணி, ஜெலட்டின் குச்சிகள், யமகா வெளியிணைப்பு யந்திரம், உருக்குக் குழாய்கள், சைனைட் செய்வதற்கான இரசாயனம், சல்பூரிக் அமிலம், கிரடிட் காட், தொலைபேசி அட்டைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தக் கட்டுரையை எழுதிய வி.சுதர்ஸன், 'போர்க்காலத்தில் இலங்கை மீனவர்களின் மீன்பிடிக்கும் உரிமை மறுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது போர் முடிந்துள்ள நிலைமையில், அவர்கள் தமது மீன்பிடி உரிமையைக் கோருவதில் ஆச்சரியப்பட என்ன இருக்கின்றது?' எனக் கேள்வி எழுப்பி தனது கட்டுரையை முடித்துள்ளார்.

*

---

## வடக்கில் இரண்டு ஆண்டுகளில் 900 நிதி நிறுவனங்கள்!

- 2009ல் வட மாகாணத்தின் மக்கள் தொகை – 9 லட்சம் பேர்.
- மொத்த தேசிய வருமானத்தில் வட பகுதியின் பங்களிப்பு – 3.3 வீதம் மட்டுமே.
- 2009ல் வங்கிகள், நிதி நிறுவனங்கள் வடக்கே செல்ல அனுமதிக்கப்பட்ட பின்னர், அங்கு சென்றவற்றின் மொத்த எண்ணிக்கை 900 ஆகும்.
- பெரும்பாலான நிதி நிறுவனங்கள் வைப்பு நிதி திரட்டுவதிலேயே அதிக ஆர்வம் காட்டுகின்றன.
- திரட்டப்பட்ட வைப்பு நிதியில் 2009ல் 30 வீதமும், 2010ல் 50 வீதமும் மட்டுமே அபிவிருத்திக்காக மீளவும் கடன்கள் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.
- நாட்டின் ஏனைய பாகங்களுடன் ஒப்பிடுகையில், வடக்கில் நபர் ஒருவரின் சராசரி வருட தலா வருமானம் குறைவாக – அதாவது 1,34,000 ரூபாயாகவே இருக்கின்றது.
- யாழ்.மாவட்டத்தில் சுமார் 60,000 குடும்பங்கள் சமுர்த்தி நிவாரணம் பெறுகின்றன.
- யாழ்.குடாநாட்டின் சனத்தொகையில் 30 வீதமானவை வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றன.
- வன்னியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோரின் எண்ணிக்கை 90 வீதமாகும்.

இந்த விபரங்களை, இலங்கை மத்திய வங்கியின் வட மாகாண முகாமையாளர் திரு.ல.சிறிதரன் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசும்போது தெரிவித்தார்.

*

---

'மனிதகுலத்தின் மொத்த வரலாற்றுக்கும் விளக்கத்தைப் பொருளாயத உறவுகளில் (Material relations) தேடவேண்டும்'. மனிதனின் உற்பத்தி வாழ்க்கையும் அவனுடைய உழைப்பும் சமூக முன்னேற்றத்தின் முக்கியமான விசையாக செயல்படுகின்றன. மனித உழைப்பு வெவ்வேறு சமூக நிலைமைகளில் வெவ்வேறு வடிவங்களை அடைகிறது. இறுதியில், 'இரண்டு வர்க்கங்கள் மட்டுமே எஞ்சுகின்றன. தொழிலாளி வர்க்கம், முதலாளி வர்க்கம்'. ஒரு தொழிலாளிக்கும் முதலாளிக்கும் உள்ள உறவு என்பது உழைப்புக்கும் திரட்டப்பட்ட உழைப்புக்கும் உள்ள உறவாகும்.

எல்லாமே விற்பனை செய்யப்படுகிறது. எதையும் யாரிடம் இருந்தும் வாங்கிவிட முடியும். அந்த அளவுக்குப் பணம் தலையான சக்தி கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட இந்த உலகத்தில், தொழிலாளியும் ஒரு பண்டமாகத்தான் மாறியிருக்கிறான். அனைத்து செல்வத்தையும் உற்பத்தி செய்யும் உழைப்பு ஒரு பண்டமாக மாற்றப்பட்டுவிட்டது.

– மார்க்ஸ்

---

# துஞ்சாவூரு மண்ண எடுத்து தாமிரபரணித் தண்ணிய விட்டு சேத்து சேத்து செஞ்சதிந்த பொம்ம..... இது பொம்மயில்ல பொம்மயில்ல உண்ம.....


தாமிரபரணி ஆறு

இப்பாடல் வரிகளை சேரனின் பொற்காலம் திரைப்படத்தின் மூலம் கிருஸ்ணராஜின் குரலில் ஒலித்ததைக் கேட்டிருக்கின்றோம். வரிகளுக்குச் சொந்தக்காரர் வேறுயாருமில்லை வைரமுத்து. நாம் தேர்ந்தெடுத்து பார்க்க விரும்பும் திரைப்படங்களின் பட்டியலில், சேரனின் படங்களையும் சேர்த்துக்கொள்ளலாம்.

பாடல்வரிக்குள் அமைந்த தாமிரபரணிக்கும், இலங்கைக்குமான வரலாற்றுத் தொடர்பை வானவில் இதழ் 3 இல் பார்த்தோம். இத்தொடர்புபற்றி செங்கையாழியான், ப.புஸ்பரட்ணம் வரைந்த கட்டுரைகளிலிருந்தும் மேலும் பல தகவல்களைப் பகிர்ந்து கொள்வது எமக்கும், தேடலுள்ள வாசகர்களுக்கும் நன்மை பயக்கும்.

பண்டைய இலங்கை, வடபகுதி நாகதீபம் எனவும், தென்பெரும்பகுதி, தாமிரபரணி அல்லது தம்பபண்ணை என்றும் இரண்டு புவியியல் அலகுகளாக விளங்கின. நாகதீபத்திற்குள், யாழ்ப்பாணக்குடாநாடு, அதன்அயற்தீவுகள், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா முதலான பிரதேசங்கள் அடங்கியிருந்தன. தாமிரபரணியானது, கதம்பநதியெனப்படும் அருவியாற்றுக்கும், கொணாநதியெனப்படும் கலாஓயாவிற்கும், இடைப்பட்ட பிரதேசமாக அறிஞர்களால் அடையாளம் காணப்பட்டது.

இவ்வாறு தென்புறத்திற்கு வழங்கப்பட்ட தாமிரபரணியென்ற பெயரையே மேலைத்தேய, கீழைத்தேய அறிஞர்களால் முழு இலங்கைக்குமான பொதுப்பெயராக தமது ஆவணங்களில் குறிப்பிட்டு வந்தனர். இப்பெயரையே கிரேக்க அறிஞர்களினால், தப்ரோபேன், தப்ரபேன், என திரிபடைந்து உச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கி.மு 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எரோதினிஸ், குளோடியஸ், தொலமி போன்ற வானவியல் - புவியியல் அறிஞர்களும், தாம்வரைந்த தேசப்படங்களில் இலங்கைத்தீவை தப்ரோன் எனக்குறிப்பிட்டுள்ளனர்.

**மோகன்**

மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்ட தம்பபன்ன என்பதும் தாமிரபரணியென்ற சமஸ்கிருத வார்த்தையின் பாளிமொழி உச்சரிப்பேயென்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இவை போக தாமிரபரணியென்று அழைக்கப்பட்டமைக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணமாக, தமிழ்நாட்டின் மேற்குக்கரையோர மலைத்தொடரில் உற்பத்தியாகின்ற தாமிரபரணியென்ற ஆற்றை தொடர்பு படுத்தியும் பார்க்கின்றனர். இந்த ஆறானது தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தின் பண்டைய குடியிருப்பான, ஆதிச்ச நல்லூருக்கூடாகப் பாய்ந்து மன்னார்க்குடாவில் விழுந்து இந்து சமுத்திரத்துடன் சங்கமமாகிறது.

ஆதிச்ச நல்லூருக்கு எதிரேயமைந்த மாந்தையும் (மன்னார் மாவட்டம்) அரிக்க மேட்டிற்கு எதிரேயமைந்த பொம்பரிப்பும் (புத்தளம் மாவட்டம்) ஒரேபிராந்தியம் எனக்கூறுமளவிற்கு பண்பாட்டு ஒருமை இருந்ததாக தொல்லியலாளர்கள் கூறுகின்றனர்.

இத்தகைய பண்பாட்டை, இடைக்கற்காலப் பண்பாடு (Mesolithic culture - மெசோலிதிக் கல்ச்சர்) பெருங்கற்காலப் பண்பாடு (Megalithic culture - மெகாலிதிக் கல்ச்சர்) என்கின்றனர் தொல்லியலாளர்கள். இடைக்கற்காலப் பண்பாடு இலங்கையில் கி.மு 28000 ஆண்டுகள் எனவும், இது தமிழ்நாட்டில் கி.மு 30000 ஆண்டுகள் எனவும், பெருங்கற்காலப் பண்பாடு கி.மு 1000 - 250 காலப்பகுதியாகவும் கருதப்படுகிறது.

இக்காலகட்டங்களில் காணப்பட்ட பண்பாட்டு ஒருமைப்பாட்டிற்கு தாமிரபரணி ஆற்று வடிநிலமக்கள், பல்வேறு காரணங்களுக்காக இலங்கையின் மேற்கு கரையோரத்தில் குடியேறி தமது தாயகப் பெயரையே தாம் குடியேறிய பகுதிக்கும் இட்டனரென சிங்கள வரலாற்று ஆசிரியரான பரணவிதான குறிப்பிடுகிறார். விஜயனின் வருகைக்கு முன்னரே (கி.மு 483-கி.மு 445) முத்துக்குளிக்க வந்த மக்களே இப்பெயரை சூட்டியிருக்கலாம் என்கிறார். மன்னார்க்குடா முத்துக்குளித்தலுக்கு (pearl fishery) புகழ்பெற்ற முத்துச்சலாபமாகும். சலாபம், சிலாபம் என்பன தமிழில் முத்துக்குளித்தலைக் குறிக்கும்.

ஆதிச்ச நல்லூரில் கிடைத்த ஈமைத்தாழிகளை ஒத்தவையே பொம்பரிப்பு என்னும் இடத்தில் கிடைத்த தாழிகளும் என தொல்லியல் ஆய்வுகள் நிரூபித்துள்ளன. ஈமைத்தாழி, முதுமக்கள்தாழி என்பன அகன்ற பெரிய பானையைக் குறிக்கும். இறந்தவர்களின் உடலையும் அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் அதனுள் இட்டு அடக்கம் செய்யும் மரபை அக்காலத்து மக்கள் கொண்டிருந்தனர். பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமைச்சின்னங்களை உருவாக்கியதால், அக்காலப்பகுதியை பெருங்கற்காலமென அழைத்தனர். ஈமைச்சின்னங்களாக, பெரியகற்களின் அமைப்பின் அடிப்படையில் கல்மேசை, நடுகல், கல்லறை, கல்வட்டம் எனப்பல வடிவங்கள் பெற்றன. இலங்கை வரலாற்று நூல்களில் மட்டுமன்றி, இந்தியா, கிரேக்கம் முதலான நாடுகளின் இலக்கியங்களிலிருந்தும், கிடைக்கப்பட்ட ஆதாரங்களிலிருந்து கி.மு 5 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே தாமிரபரணியென்ற பெயரால் இலங்கை பிற நாடுகளில் அறிமுகமாகியிருந்ததாக குறிப்பிடுகின்றனர்.

**- தாமிரபரணி ஆறு நெல்லை மாவட்டம் பாபநாசம் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் தோன்றி, தூத்துக்குடி மாவட்டம் புன்னைக்காயல் அருகே கடலில் கலக்கின்றது.**
*

---

# இழுபறிக்குப் பின்னர் யாழ் பல்கலைக்கழகத்துக்கு புதிய துணைவேந்தர் நியமனம்

நீண்ட இழுபறிக்குப் பின்னர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக, அப்பல்கலைக்கழக மருத்துவத்துறை பேராசிரியை வசந்தி அரசரட்ணம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் (2010) நவம்பர் 27ம் திகதி புதிய துணை வேந்தரை நியமிப்பதற்கான தேர்தல் நடைபெற்றபோது, மூவர் போட்டியிட்டனர். அவ்வாறு போட்டியிட்டவர்களில் வசந்தி அரசரட்ணம் 14 வாக்குகளையும், அப்போதிருந்த துணை வேந்தர் என்.சண்முகலிங்கமும், முன்பொருமுறை துணை வேந்தராக நியமிக்கப்பட்டு, புலிகளின் கொலை அச்சுறுத்தலால் நாட்டைவிட்டு வெளியேறி அமெரிக்காவில் தங்கியிருந்து விட்டு, புலிகளின் அழிவுக்குப் பின்னர் நாடு திரும்பிய ரட்ண ஜீவன் கூலும், தலா 9 வாக்குகளையும் பெற்றிருந்தனர்.

இந்த சூழ்நிலையில் ரட்ண ஜீவன் கூல் புதிய உப வேந்தராக நியமிக்கப்படலாம் என்ற பிரச்சாரம் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டதுடன், சண்முகலிங்கமே உப வேந்தராகத் தொடரலாம் என்ற ஊகங்களும், அதற்கான திரைமறைவு முயற்சிகளும் பலமாக நடைபெற்று வந்தன. ஆனால் நீடித்த இழுபறிகளுக்குப் பின்னர், நிலைமைகளைக் கவனத்தில் கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அதிக வாக்குகளை பெற்றவருக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற ஜனநாயக நெறிமுறையை மனதில் கொண்டும், அதே பல்கலைக்கழகத்தில் ஏற்கெனவே ஆற்றிவரும் சேவையையும் மனதில் கொண்டும், வசந்தி அரசரட்ணம் அவர்களை புதிய உப வேந்தராக நியமனம் செய்துள்ளார்.

புதிய துணைவேந்தரின் பதவிக்காலத்தில், யாழ்.பல்கலைக்கழகம் மேலுமொரு புதிய கட்ட வளர்ச்சியை அடைந்து, அங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்கும், சமுதாயத்துக்கும் பெரும் பங்களிப்பை வழங்க வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

---

முன்பக்கத்தொடர்ச்சி..

நாட்டின் ஏனைய மக்களுடன் ஒப்பிடுகையில் அவர்களது வாழ்வு இன்னமும் மூன்றாம் தரப் பிரஜைகளின் வாழ்வாகவே இருந்து வருகிறது. குறிப்பாக அவர்களது ஊதியம் நாட்டின் ஏனைய துறை ஊழியர்களுடன் ஒப்பிடுகையில் மூன்றிலொன்றுக்கும் குறைவாகவே இருந்து வருகிறது. அவர்களது ஊதியப் பிரச்சினையே எல்லாவற்றையும் விடத் தலையாய பிரச்சினையாக இருந்து வருகிறது.

அவர்களது சம்பளவுயர்வு என்பது, அரசாங்கத்தால் வரையறுக்கப்படாது, தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கும், அவர்களது தொழிற்சங்கங்களுக்கும் இடையில் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை ஏற்படுத்தப்படும் கூட்டு ஒப்பந்தங்கள் மூலமாகவே தீர்மானிக்கப்படுகின்றது. அதன்படி தற்போதைய ஒப்பந்தம் இந்த வருடம் (2011) மார்ச் 31ந் திகதியுடன் முடிவுக்கு வந்துவிட்டது. முன்னைய ஒப்பந்தப்படி தொழிலாளரின் அடிப்படை சம்பளம் 290 ரூபாவாகவும், நாள் சம்பளம் 405 ரூபாவாகவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது அந்த நேரத்திலேயே 'யானைப் பசிக்கு சோளப்பொரி' போட்ட கதையாகத்தான் இருந்தது.

இன்று இலங்கையின் வாழ்க்கைச் செலவு வானத்தை விஞ்சிச் சென்றுவிட்ட ஒரு சூழலில், தோட்டத் தொழிலாளர் நியாயமானதொரு சம்பளவுயர்வை வேண்டி நிற்கின்றனர். தற்போதைய நிலையில் அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான தொழிற்சங்கங்கள் அடிப்படைச் சம்பளமாக 500 ரூபாவும், மேலதிக ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 250 ரூபாயையும் கோரி நிற்கின்றன. உண்மையில் இந்தத் தொகை கூட இன்றைய வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யப் போதுமாக இல்லையென்ற போதிலும், இதைக் கூட வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனம் மறுப்புத் தெரிவித்து வருகிறது. தமது தொழில் நஸ்டத்தில் நடைபெறுவதாகவும், தொழிலாளரின் வாழ்க்கைத் தரம் முன்னைய காலங்களை விட மேம்பாடானதாக இருப்பதாகவும் கூறி, தொழிற்சங்கங்களின் கோரிக்கையை முதலாளிமார் சம்மேளனம் நிராகரித்து வருகிறது.

இந்தச் சூழ்நிலையில் தொழிலாளர்களின் நியாயமான உரிமையை வென்றெடுப்பதில் அவர்கள் மத்தியில் செயற்படும் தொழிற்சங்கங்கள் யாவும், தமது வேறுபாடுகளை மறந்து ஓரணியில் நின்று செயற்படுவது அவசியம். ஆனால் துரதிஸ்ட்டவசமாக தொழிற்சங்கங்கள் சுயநல அடிப்படையிலும், அரசியல் அடிப்படையிலும் பிளவுபட்ட நிலையிலேயே இருக்கின்றன. தொழிலாளரின் நலன் கருதி இந்த நிலை மாற்றப்பட வேண்டும். அத்துடன் வழமைபோல அரசாங்கமும் இந்த விவகாரத்தை தள்ளி நின்று வேடிக்கை பார்க்காமல், தோட்டத்தொழிலாளரின் ஊதிய உயர்வுக்கு முதலாளிகளை நிர்ப்பந்திக்க வேண்டும்.

பழைய ஒப்பந்தம் காலாவதியாகி ஒரு மாதம் முடியப் போகின்ற சூழ்நிலையில், துரிதமான செயற்பாடுகள் மூலம் புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, தொழிலாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு, தொழிற்சங்கங்கள், முதலாளிமார் சம்மேளனம், அரசாங்கம் ஆகிய முத்தரப்புகளையும் சார்ந்திருக்கிறது. விரைவில் நல்லதொரு முடிவு எட்டப்படுவது அவசர அவசியமாகும்.

*

---

16ம் பக்கத் தொடர்ச்சி..

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, கடந்த காலங்களில் லிபரல் அல்லது நியுடெமக்கிரட்டிக் கட்சிகளுக்கு வாக்களிப்பதே அவர்களது வழமையாக இருந்து வந்துள்ளது. ஆனால் கடந்த பொதுத்தேர்தலின் போது ஒரு கணிசமான தமிழர்கள், புலிகளையும் அவர்களது துணை அமைப்பான உலகத் தமிழர் இயக்கத்தையும் கனடாவில் தடைசெய்ய வைப்பதற்காக கொன்சர்வேட்டிக் கட்சியை ஆதரித்து வாக்களித்தனர். அக்கட்சியும் ஆட்சிக்கு வந்ததும் அவ்வாறே செய்தது. இம்முறை தமிழ் மக்கள் எதை அடைவதற்காக வாக்களிப்பார்கள் என்பது இன்னமும் தெளிவில்லாமலே இருக்கின்றது. போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களும், கனடிய மக்கள் பொதுவாக எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி எதுவும் கூறாமல், தமிழர்கள் பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்ற பழைய பல்லவியையே பாடி வருகின்றனர்.

வழமைபோல பிரதான கட்சிகளிலிருந்து டசின் கணக்கில் உறுப்பினர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்புவதை விட, கிறீன் கட்சியிலிருந்தும், கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தும் தலா ஒருவரையாவது பாராளுமன்றத்துக்கு அனுப்பினால், அவர்கள் குறைந்த பட்சம் சாதாரண மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை முன்வைப்பதற்கு பாராளுமன்றத்தை ஒரு மேடையாகப் பயன்படுத்தவாவது உதவும் என்ற கருத்தும் சில தரப்புகளிடையே இருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

---

# கனடாவில் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல்!

## காண்டீபன்

கனடாவில் பிரதமர் ஸ்ரீபன் காப்பர் தலைமையிலான சிறுபான்மை அரசு தனது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்பதாக, எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் அவ்வரசு கவிழ்க்கப்பட்டது. அதைத் தொடர்ந்து எதிர்வரும் மே மாதம் 02ந் திகதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது.

இத்தேர்தலில் பிரதான தேசியக் கட்சிகளான தற்போதைய பிரதமர் ஸ்ரீபன் காப்பர் தலைமையிலான கொன்சர்வேட்டிக் கட்சி, மைக்கேல் இக்ரானியேவ் தலைமையிலான லிபரல் கட்சி, ஜக் லேற்றன் தலைமையிலான நியு டெமக்கிரட்டிக் கட்சி என்பனவும், கியூபெக் மாகாணத்தில் வாழும் பிரெஞ்சு மொழி பேசும் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் புளக் கியூபெக்குவா கட்சியும் போட்டியிடுகின்றன. இவை தவிர கிறீன் கட்சி, கனடிய கம்யூனிஸ்ட் கட்சி என்பனவும் இத்தேர்தலில் போட்டியிடும் கட்சிகளாகும்.

இத்தேர்தலில் கொன்சர்வேட்டிக் கட்சிக்கும், லிபரல் கட்சிக்கும் இடையில் கடும் போட்டி இருக்கும் என கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. கொன்சர்வேட்டிக் கட்சி வலதுசாரிக் கொள்கைகளைப் பின்பற்றும் கட்சி என்பதால், அக்கட்சி ஆட்சிக்கு வந்தால் சாதாரண மக்களுக்கும், புதிதாக கனடாவில் குடியேற இருக்கும் மக்களுக்கும் பெரும் பாதிப்புகள் ஏற்படும் என்பதே எதிர்க்கட்சிகள் செய்யும் பிரதான பிரச்சாரமாக இருக்கின்றது. குறிப்பாக அக்கட்சி மீண்டும் ஆட்சிபீடமேறினால் சுகாதாரத்துறை தனியார்மயமாகலாம், வரிகள் அதிகரிக்கப்படலாம், உணவுப் பொருட்கள், எரிவாயு போன்றவற்றின் விலைகள் அதிகரித்துச் செல்லலாம் என்பதுடன், கனடா தேவையில்லாமல் ஆப்கானிஸ்தான், லிபியாவில் அமெரிக்க – நேட்டோ படைகளுடன் சேர்ந்து செயல்படுவது தொடரலாம் என்பன போன்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளையில், எதிர்க்கட்சிகளிடம் கனடாவின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தெளிவான திட்டங்கள் எதுவும் இல்லையென கொன்சர்வேட்டிக் கட்சி பதிலுக்கு பிரச்சாரம் செய்து வருகின்றது.

Elections Canada

அத்துடன் தான் மீண்டும் பதவிக்கு வந்தால், சட்ட விரோத குடியேற்றவாசிகளைத் தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அக்கட்சி தெரிவிக்கிறது. இதற்கு உதாரணமாக, கடந்த வருடம் புலி ஆதரவாளர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோரை ஏற்றிக்கொண்டு வான்கூவர் துறைமுகத்தை வந்தடைந்த இலங்கைத் தமிழ் குடியேற்றவாசிகளின் இரண்டு கப்பல்களை அது தனது பிரச்சாரத்துக்குப் பயன்படுத்துகின்றது. ஆனால் அதேநேரத்தில் கனடாவில் புலிகளின் முக்கியஸ்தராகச் செயற்பட்ட தமிழர் ஒருவரை அக்கட்சி தனது வேட்பாளராக நிறுத்தியதின் மூலம் பெரும் சர்ச்சையிலும் சிக்கியுள்ளது.

பொதுவாக கனடா போன்ற வளர்ச்சியடைந்த மேற்கத்தைய நாடுகளில் உள்ள அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரை, அவற்றின் அடிப்படைக் கொள்கைகளில் பெரும் வித்தியாசங்கள் இருப்பதில்லை. குறிப்பாக இக்கட்சிகளின் பல்தேசியக் கம்பனிகளுக்குச் சார்பான நிலைப்பாட்டிலோ, ஏகாதிபத்தியசார்பு நிலைப்பாட்டிலோ பெரும் வித்தியாசம் இருப்பதில்லை. இதற்கொரு சிறந்த உதாரணம், கனடாவிலுள்ள பிரதான கட்சிகள் யாவுமே இஸ்ரேலிய சியோனிஸ்டுகளுக்கு ஆதரவாக இருப்பதாகும்.

இதேவேளை கனடாவில் வாழும் தமிழ் மக்கள் சார்பாக இத்தேர்தலில் சிலர் கொன்சர்வேட்டிக் கட்சி, நியு டெமக்கிரடிக் கட்சி என்பனவற்றில் இணைந்து போட்டியிடுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் புலிகளின் ஆதரவாளர்கள். கனடாவின் பிரதான கட்சிகள் எல்லாவற்றுக்குள்ளும் ஊடுருவ வேண்டும் என்ற புலிகளின் திட்டத்திற்கு அமைவாகவே இவர்கள் பல கட்சிகளில் இணைந்து போட்டியிடுகிறார்கள் என்ற கருத்து பரவலாக உள்ளது.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...